மொழிபெயர்ப்பு

TIP/SS/01/03 2019.07.08

**வியாபார மற்றும் முதலீட்டு கொள்கை சுற்றறிக்கை இல: 1/2018 (3)**

ஜனாதிபதி செயலாளர்

பிரதமரின் செயலாளர்

அமைச்சரவை செயலாளர்

அமைச்சுக்களின் செயலாளர்கள்

ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்

மாகாண பிரதம செயலாளர்கள்

திணைக்களங்களின் தலைவர்கள்

அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்டமுறை நிறுவனங்களின் தலைவர்கள்

**சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்கும் திட்டம்**

சலுகை அடிப்படையில் மோட்டார் வாகனங்களை வழங்குவது தொடர்பான 01/2018 (1) மற்றும் 01/2018 (2) இலக்க சுற்றறிக்கைகள் ஊடாக திருத்தப்பட்ட 01/2018 இலக்க வியாபார மற்றும் முதலீட்டு கொள்கை சுற்றறிக்கையின் 2.6, 8.2 மற்றும் 8.2.ii பிரிவுகள் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகிறது.

**01. 2.6. பிரிவிற்குக் கீழே "2.6.1" ஆக பின்வரும் பிரிவு உள்ளடக்கப்படுகிறது.**

"2.6.1 2015.11.21 ஆந் திகதி அல்லது அத் திகதியின் பின்னர் நடைமுறையில் இருந்த யாதாயினும் ஒரு சலுகை ரீதியான மோட்டார் வாகன அனுமதிப் பத்திர திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரம் ஒன்றின் ஊடாக மோட்டார் வாகனம் ஒன்றைப் பெற்றிருப்பின் குறித்த அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்காக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நிறுவனத்தின் தலைவரால் குறித்த அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பப்படிவம் அங்கீகரிக்கப்பட்ட திகதியில் இருந்து ஐந்து (05) வருட தொடர்ச்சியான சேவைக் காலத்தை தாண்டாதுள்ள உத்தியோகத்தர்கள்".

**02. 08.02.ii பிரிவு நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு உள்ளடக்கப்படுகிறது.**

"08.02.ii முதற் தடவையாக அல்லாத சந்தர்ப்பம் ஒன்றில் அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் போது

(அ). 2015.11.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்திற்காக பெற்றுக் கொண்ட வாகனத்திற்காக திறக்கப்பட்ட கடன் கடிதத்தின் பிரதி / உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட வாகனமாயின் அதனைக் கொள்வனவு செய்வதற்காக முதலாவது தவணைக் கட்டணத்தை செலுத்திய பற்றுச் சீட்டின் பிரதி,

(ஆ). 2015.11.21 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்திற்காக மோட்டார் வாகனமொன்றைப் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர் ஒருவர், குறித்த அனுமதிப்பத்திரத்திற்காக சமர்ப்பித்த விண்ணப்பத்திற்காக மேலே "2.6.1" இல் குறிப்பிட்டுள்ள "அதிகாரி" மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள திகதி தொடர்பாக நிறுவனத் தலைவரால் சான்றுப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்ற சான்றிதழ் அல்லது விண்ணப்பத்தில் உரிய இடத்தில் நிறுவனத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று".

03. "8.2.vi" ஆக பின்வரும் பிரிவு உள்ளடக்கப்படுகிறது.

"8.2.vi. மேலே குறிப்பிட்டவாறு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்காக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அதன் பிரதி ஒன்று குறித்த உத்தியோகத்தரின் தனிப்பட்ட ஆவணக் கோப்பில் சேர்க்கப்படல் வேண்டும்".

04. 2018.02.15 ஆந் திகதிய 01/2018 எனும் இலக்க வியாபார முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கையிலும் அதன் திருத்தப்பட்ட சுற்றறிக்கைகளிலும் குறிப்பிட்டுள்ள ஏனைய அனைத்து ஏற்பாடுகளும் மாற்றமடையாமல் இருக்கும்.

**ஒப்பம்: ஆர்.எச்.எஸ்.சமரதுங்க**

பொதுத் திறைசேரியின் செயலாளர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர்

பிரதிகள்:

| | | |
|---|---|---|
| 01. | கணக்காய்வாளர் அதிபதி | - தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 02. | மத்திய வங்கியின் ஆளுநர் | - தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 03. | பணிப்பாளர் நாயகம், வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை | - மேற்குறிப்பிட்ட விதமாக நடவடிக்கை எடுப்பதற்காக |
| 04. | பணிப்பாளர் நாயகம், அரசிறைக் கொள்கை | - தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 05. | பணிப்பாளர் நாயகம், இலங்கை சுங்கம் | - தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 06. | பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைகள் | - தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 07. | பணிப்பாளர் நாயகம், பொதுத் தொழில்முயற்சிகள் | - தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 08. | ஆணையாளர் நாயகம், மோட்டார் வாகன போக்குவரத்து | - தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 09. | ஆணையாளர் நாயகம், உள்நாட்டு இறைவரி | - தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 10. | பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ கணக்காய்வு | - தேவையான நடவடிக்கைகளுக்காக |